**வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றம் - 2019**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புகளையும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களையும் உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்துக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இலுள்ள 29 ஆவது பந்தியின் படி, மன்றத்துக்குச் சொந்தமான ரூபா 73,136,262 பெறுமதியான காணி யொன்றை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் தனியார் கம்பனியொன்றுடன் கைச்சாத்திட்டிருந்த குத்தகை உடன்படிக்கை 2018 யூலை 03 ஆந் திகதியுடன் காலாவதியானமை மற்றும் அந்த தனியார் கம்பனி மீண்டும் குத்தகை அடிப்படையில் அக்காணியை பெற்றுக் கொள்வதற்கு வழக்குத் தொடர்ந்திருந் தமை தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களைப் பயன்படுத்தி பொருளா தார தீர்மானங்களை எடுப்போரின் தீர்மான ங்கள் மீது தாக்கம் செலுத்தக்கூடிய போதிய தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் அசைவற்ற ரூபா 6,350,696 தொகையான இருப்புக்கள் தொடர்பில் நட்டக்கழிவுக்காக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடி க்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் இருப்புக்களின் தேறக் கூடிய நிகரப் பெறுமதி மீது புதிதாக மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பில் நட்ட ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இலுள்ள 5.5 ஆவது பந்தியின் படி, நீண்ட காலமாக கடன்பட்டோராக காணப்படுகின்ற மீதிகள் தொடர்பில் நட்டக்கழிவு இனங்காணப்பட்டு அதற்காக ஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2005 முதல் 2016 வரையான காலத்திற்குரிய ரூபா 2,439,293 கடன்பட்டோர் மீதிகள் தொடர்பில் நட்டக்கழிவு இனங்காணப்பட்டிருக்க வில்லை. | இந்த அவதானிப்புக்கு பதலளிக்கப்பட்டிருக்கவி ல்லை. | அறவிடுதல் நிச்சமற்ற கடன்பட்டோர் மீதிகள் மீது ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இலுள்ள 34 ஆவது பந்தியின் படி, மன்றத்தின் பயன்பாட்டிலுள்ள காணி மற்றும் கட்டிடங்கள் 2009 ஆம் ஆண்டின் பின்னர் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நியாயமான சந்தைப் பெறுமதிக்கு அமைய கணக்குகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவ டிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் படி, மன்ற த்தின் பயன்பாட்டிலு ள்ள காணி மற்றும் கட்டிடங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான சந்தைப் பெறுமதி நிதிக் கூற்று க்களில் காட்டப்படுதல் வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இலுள்ள 120 அ பந்தியின் படி, ஊழியர் நல ஒதுக்கீட்டை கணிப்பிடுகையில் பிரயோகிக்கப்பட வேண்டிய அடிப்படைக் கோட்பாடாகிய ஊழிய நலச் செலவினத்தின் நிகழ்கால சேவைக் கிரயம், ஆண்டிற்கான வட்டிக் கிரயம் மற்றும் எடுகோல்களின் மாற்றம் காரணமாக ஏற்பட்ட ஆயுட்கால நயம்.'.நட்டம் மீதான பொறுப்பு ஆகியன வெளிப்படுத்தப்படாததுடன், 93 அ பந்தி யின் படி எடுகோல்களின் மாற்றம் காரணமாக ஏற்பட்ட ஆயுட்கால நயம்.'. நட்டம் மீதான பொறுப்பு ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காணப்பட் டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடி க்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் படி ஊழிய நல ஒதுக்கீட்டை கணிப்பிடுகையில் ஆயுட்கால நயம்.'. நட்டம் மீதான பொறுப்பை வெளிப்ப டுத்தலானது ஏனைய விரிவான வருமானத் தில் இனங்காணப்ப டுதல் வேண்டும். |
| (ஊ) | ரூபா 1,961,850 தொகையான ஸ்ரீ பங்களாஸ் படகு இணைப்பு வணிகத்தின் முதலீடு, ஏனைய செலுத்த வேண்டிய மீதியில் நட்டக்கழிவு ஏற்பாடாக நிதி நிலைமைக் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் படி, நட்டக்கழிவுச் சொத்துக்களின் முன் | எதிர்காலத்தில் நடவடி க்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் படி நட்டக் கழிவுச் சொத்துக்க ளின் முன் கொண்டு செல்லும் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்த ப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டு செல்லும் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாமையால் முதலீடுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ள ஸ்ரீ பங்களாஸ் படகுகளின் முதலீட்டுப் பெறுமதி மிகைப்படுத்திக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (எ) | ரூபா 135,000,000 கிரயமான வரையறுக்கப்பட்ட சீனோர் ஓரியன்ட் பர்ல் சீ பூட் உணவகம் அமைந்துள்ள 2 ரூட், 12 பேர்ச் காணி மற்றும் ரூபா 115,000,000 கிரயமான மட்டக்குளி இயந்திரவேலை நிலையத்திலுள்ள 25,000 சதுர அடி விஸ்தீரணமுடைய குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள களஞ் சியம் என்பன 40 ஆவது நியமத்தின் 75 மற்றும் 79 ஆம் பந்திகளின் பிரகாரம் முதலீட்டுச் சொத்துக்கள் என நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப் பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நடவடி க்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் படி தொட ர்ச்சியாக வருமான த்தை ஈட்டித்தரும் சொத்துக்கள் முதலீட்டு சொத்துக்களாக நிதிக் கூற்றில் வெளிப்படுத்த ப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டுக்கான நிதிக் கூற்றுக்களில், நோர்த் சீ கம்பனி என்ற பெயரில் ரூபா 26,294,662 கடன்பட்டோர் மீதியொன்று காட்டப்பட்டிருந்ததுடன் நோர்த் சீ கம்பனியின் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் வியாபாரக் கடன்பட்டோரின் கீழ் சீ-நோர் மன்றம் யாழ்ப்பாணம் என்ற பெயரில் ரூபா 5,320,788 மீதியொன்று மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த மீதிகளை ஒப்பீடு செய்து வேறுபாட்டி ற்கான காரணங்கள் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. மேலும், இலங்கை கணக்கீட்டு நியமம் - ளுடுகுசுளு 9 இன் 5.5 ஆம் பந்தியின் படி, இந்த நீண்டகால நிலுவைக்கு சேதநட்டங்கள் எதுவும் அடையாளம் காணப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் நடவடி க்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | மீதிகளை ஒப்பிட்டு வேறுபாட்டிற்கான கார ணங்களை இனங்க ண்டு அதனை தீர்ப்பத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,989,209 மொத்த கொள்வனவுகள் 2020 இற்கான கொள்வனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் 2019 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுகள் ரூபா 2,738,898 இனாலும் பொருட்கள் சேவைகள் வரி ரூபா 250,311 இனாலும் | எதிர்காலத்தில் நடவடி க்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | கொள்வனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,989,209 இனாலும் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | விற்பனை முற்பணப் பெறுவனவுகளை விற்பனை முற்பணக் கணக்கின் செலவுப் பக்கத்தில் பதிவதற்குப் பதிலாக கடன்பட்டோர் பேரேட்டில் செலவு வைத்திருந்தமையால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களிலுள்ள கடன்பட்டோர் மீதி ரூபா 38,452,338 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | விற்பனை முற்பணப் பெறுவனவுகள் சரியாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | ஏனைய பெறவேண்டிய மீதிகளில் உள்ளடங்கியுள்ள 2007 முதல் 2014 வரையிலான ஆண்டுகளிற்குரிய ரூபா 2,466,894 ஆன பொருளாதார சேவைக்கான கட்டணத்தை வருமான வரிக்கு எதிராக எதிரீடு செய்யக் கூடிய காலம் 2019 ஆம் ஆண்டளவில் முடிவடைந்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவினமாக பதிவழிப்பதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த மையால் செலுத்த வேண்டிய மீதி ரூபா 2,466,894 தொகையாலும் ஆண்டுக்கான நட்டம் அந்த தொகையாலும் குறைவாக கூறப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | செலவாக பதிவழிக்கப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப் படுதல் வேண்டும். |
| (ஈ) | மன்றத்தினால் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கும் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் முதல் 3 காலாண்டுகளுக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்திய முறையே ரூபா 1,313,488 மற்றும் ரூபா 385,973 பொருளாதார சேவைக் கட்டணங்கள் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணக் கணக்கில் மறைப் பெறுமதியாக அறிவிக்கப்பட்டிருந்தமையாலும் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் 4 ஆம் காலாண்டுக்கு செலுத்த வேண்டிய ரூபா 127,764 பொருளாதாரச் சேவைக் கட்டணம் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்காமையாலும் ஏனைய செலுத்தவேண்டிய மீதி ரூபா 1,827,225 ஆல் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப் படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்துமகல காணியிலிருந்தான முதலீட்டு வருமானமாக ரூபா 2,700,000 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான முதலீட்டுச் சொத்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | முதலீட்டு வருமானம் கிடைக்கின்ற ஆதன த்தின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுதல் வேண்டும். |

**1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்**

| | விடயம் | நிதிக் கூற்றின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கையின் படி பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | மீதி உறுதிப்பத்தப் பட்ட மூன்று கடன்பட்டோரின் மீதிகள் | 5,647,537 | **0** | 5,647,537 | ஒரு கடன்பட்டோர் மீதி 2020 இல் கிடைத்துள்ளது | சரியாக பதிலளிக்கப்பட வேண்டுமென்பதுடன், நிதிக்கூற்றுக்களுக்கும் நேரொத்த அறிக்கைகளுக்கும் இடையிலான பெறுமதிகள் ஒப்பிடப்பட்டு வேறுபாட்டிற்கான காரணங்களை பரிசோதித்து சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ஊழியர் கடன் | 8,903,732 | 9,563,759 | 660,058 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களுக்கும் நேரொத்த அறிக்கைகளுக்கும் இடையிலான பெறுமதிகள் ஒப்பிடப்பட்டு வேறுபாட்டிற்கான காரணங்களை பரிசோதித்து சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | 06 கடன்கொடுத்தோர் மீதிகள் | **2,195,541** | **3,142,633** | 947,092 | எதிர்காலத்தில் நடவடிக்கை எடு க்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ரூபா 842,270 வேறு பாடு காணப்படு | நிதிக் கூற்றுக்களுக்கும் நேரொத்த அறிக்கைகளுக்கும் இடையிலான பெறுமதிகள் ஒப்பிடப்பட்டு வேறுபாட்டிற்கான காரணங்களை பரிசோதித்து சரியான பெறுமதி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கின்ற கடன்கொடுத்தோர் மீதிக் காக மன்றத் திடம் சான்றுகள் இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. | கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 06 வங்கிக் கணக்கு மீதிகள் | 17,003,598 | i. மாதாந்த வங்கிக் கூற்றுக்கள்<br>ii. 2019 திசெம்பர் மாதத்துக்குரிய வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்கள்<br>iii. மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 06 வங்கிக் கண க்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்துமூலச் சான்றுகள் கணக்கா ய்விற்கு சமர்ப்பிக் கப்பட வேண்டும். |
| (ஆ) நிலையான வைப்புகள் | 13,169,713 | நிலையான வைப்புச் சான்றிதழ்கள் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிலையான வைப்பு மீதியை உறுதிப் படுத்துவதற்குத் தேவையான நிலை யான வைப்புச் சான்றிதழ்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண் டும். |
| (இ) பெறவேண்டிய பொருள் முற்பணம் | 115,736 | காணப்படும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூலச் சான்று | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2007, 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிலிருந்து நிலவிவருகின்ற பெற வேண்டிய பொருள் முற்பணங்களின் காணப்படு தன்மை யை உறுதிப்படுத்து வதற்குத் தேவை யான நிலையான வைப்புச் சான்றிதழ் கள் கணக்காய்வி ற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | ஏனைய பெறவேண்டிய மீதிகள் | 1,941,584 | காணப்படும் தன்மையை உறுதிப்ப படுத்துவதற்கான எழுத்துமூலச் சான்று | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதிகளை உறு திப்படுத்த முடியாது ள்ள ஏனைய பெற வேண்டிய மீதிகளின் காணப்படு தன்மை யை உறுதிப்படுத்து வதற்குத் தேவை யான எழுத்துமூலச் சான்றுகள் கணக் காய்விற்கு சமர்ப்பி க்கப்பட வேண்டும். |
| (உ) | காணிகள் | 8,500,000 | காணப்படும் தன்மை யை உறுதிப்படுத் துவதற்கான உறுதி அல்லது சட்டரீதியான ஆவணம் | எதிர்காலத்தில் நட வடிக்கை எடுக்கப்ப டும் என அறிவிக்க ப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள காணியின் காணப் படு தன்மையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்து மூலச் சான்றுகள் கணக் காய்விற்கு சமர்ப்பி க்கப்பட வேண்டும். |
| (ஊ) | மூலப்பொருள் இருப்பு | 9,833,369 | 56057 கிலோகிராம் மூலப்பொருள் பயன்படுத்தப்படமைக் கான சான்று | பதிலளிக்கப்படவி ல்லை. | மூலப்பொருள் பயன்படுத்தப்படமைக்கா ன சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | மீளளிக்கப்பட வேண்டிய வைப்புக்கள் | 2,110,317 | ஆட்களின் பெயர் தவிர்ந்த ஏனைய தகவல்கள் | குறித்த வழங்குனரின் கோரிக்கைக்கு அமைய விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள து | மீளளிக்கப்பட வேண்டிய வைப்புக் களை உறுதிப்ப டுத்துவதற்குத் தேவையான எழுத் துமூலச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | பெறவேண்டிய பிடித்துவைத்தல் வரி | 1,119,030 | பிடித்துவைத்தல் வரி யுடன் தொடர்புடைய வரிச் சான்றிதழ் | பதிலளிக்கப்படவி ல்லை. | மீதியின் சரியான தன்மையை உறுதி ப்படுத்துவதற்குத் தேவையான வரிச் சான்றிதழ் கணக் காய்விற்கு சமர்ப்பி க்கப்பட வேண்டும். |
| (ஐ) | வாடகை வருமானம் | 728,550 | வாடகை உடன்படிக்கைகள் | பதிலளிக்கப்படவி ல்லை. | மீதியின் சரியான தன்மையை உறுதி ப்படுத்துவதற்குத் தேவையான வாடகை உடன்படி க்கைகள் கணக் காய்விற்கு சமர்ப்பி க்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 முதல் 2018 வரை நிலவி வருகின்ற ரூபா 8,878,273 பெறவேண்டிய முற்பண மீதியையும் 2011 ஆம் ஆண்டு முதல் கடற்றொழில் அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 3,527,824 மீதியையும் அறவிடுவத ற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. | நீண்டகால நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 முதல் 2017 வரை நிலவி வருகின்ற ரூபா 3,030,118 கூட்டுத் தொகையான செலுத்த வேண்டிய பிடி காசை (சுநவநவெழைெ ீயலயடிடந) தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டு ள்ளது. | நீண்டகால நிலுவை மீதி களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 முதல் நிலவி வருகின்ற ரூபா 27,688,325 தொகையான விற்பனை முற்பண மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் சீராக்கப்படும் என அறிவிக் கப்பட்டுள்ளது. | முற்பண மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2011 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றுக்கு மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 4,909,775 முற்பணத்தையும் வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களிலி ருந்து 1 முதல் 5 ஆண்டுகள் வரை நிலுவையிலுள்ள ரூபா 4,367,309 மீதியையும் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 4,524,855 மீதியையும் அறவிடுதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்க ப்பட்டுள்ளது. | நீண்ட காலமாக தீர்க்கப் படாதுள்ள முற்பண மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) கூட்டிணைப்பு புறவிதி இன் 3.3 மற்றும் 3.5 ஆம் பந்தி | வ.்.ப சினோர் மன்றமானது ஐஸ் உற்பத்தி, கடல் உற்பத்திகளை பொதியிடுதல், விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல், மீன்பிடி வலை களை உற்பத்தி செய்தல், படகுகளை நிர்மாணித்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய போதிலும், அதிலிருந்து விலகி படகு உற்பத்தியில் மாத்திரம் ஈடுபட்டிருந்த மையால் மன்றம் தாபிக்கப்பட்ட குறிக் கோளிலிருந்து விலகிச் செயற்பட்டி ருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதில் அளிக்கப்பட்டிரு க்கவில்லை. | மன்றம் தாபிக்கப் பட்ட குறிக்கோளி ற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) கூட்டிணைப்பு அகவிதி | | | |
| (i) 53 ஆம் பந்தி | வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டுமென குறிப்பிடப் பட்டுள்ள போதிலும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக் கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிரு க்கவில்லை. | கூட்டிணைப்பு அகவிதியின் படி வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். |
| (ii) 58 ஆம் பந்தி | வருடாந்த பொதுக் கூட்டத்தில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் மன்றத்தின் தலைவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், தலைவரை நியமித்தல் அவ்வாறு இடம்பெற்றி ருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிரு க்கவில்லை. | கூட்டிணைப்பு அகவிதியின் படி பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் மன்றத்தின் தலை வர் நியமிக்கப்படு தல் வேண்டும். |
| (இ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம லாப நிதி (திருத்த) சட்டம் | (ை) எந்தவொரு மாதத்தினதும் ஊழி யர் சேமலாப நிதி பங்களிப்புத் தொகையை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக அனுப்பிவைக்க வேண்டிய போதிலும், 2019 நவம்பர் மாதத்திற்குரிய ரூபா 536,326 தொகை 18 நாட்கள் தாமதித்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | அடுத்துவரும் மாதத் தின் இறுதித் திகதி யன்று அல்லது அத ற்கு முன்னதாக அனு ப்பிவைக்க முடியும் என அறிவிக்கப்பட்டு ள்ளது. | சட்டத்திற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும். |
| | (ை) 2017 யூலை முதல் திசெம்பர் வரையான காலத்திற்குரிய ஊழியர் ஒருவரின் ரூபா 36,740 ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பு 2020 ஒக்தோபர் 20 வரை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிரு க்கவில்லை. | சட்டத்திற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும். |

**1.8 வரிப் பிரமாணங்களுடன் இனங்காமை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006, 2011 மற்றும் 2012 முதல் நிலவி வருகின்ற உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 7,412,259 வரித் தொகை பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் ஏனைய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து உறுதிப்படுத்தல் பெறப்பட் டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்று வருமானமாக கணக் கீடு செய்யப்படுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 25,600,930 பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்கு முன்னைய நேரொத்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 56,366,471 ஆக காணப்பட்டதனால் நிதி விளைவுகளில் ரூபா 30,765,541 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏனைய வருமானம் 2742 சதவீதத்தினால் அல்லது ரூபா 31,769,243 ஆல் அதிகரித்தமையே நிதி விளைவுகளில் ஏற்பட்ட இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணியாக காணப்பட்டது.

**2.2 விகிதப் பகுப்பாய்வு**

(அ) முன்னைய ஆண்டின் 1:1.82 உடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நடைமுறைச் சொத்து விகிதம் 1:1.48 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான கையிருப்பு 42 சதவீதத்தாலும் ஏனைய கொடுப்பனவுகள் 26 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தமை மற்றும் காசு மற்றும் வங்கி மீதிகள் 63 சதவீதத்தாலும் குறைவடைந்தமையே இந்த விகிதம் குறைந்தமைக்கு பிரதான காரணமாகும்.

(ஆ) முன்னைய ஆண்டின் 1:1.14 உடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான விரைவுச் சொத்து விகிதம் 1:0.70 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டில் நிலவிய ரூபா 45,857,849 வங்கி மீதியானது ரூபா 28,724,251 ஆல் வீழ்ச்சியடைந்தமையே இந்த விகிதம் குறைந்தமைக்கு பிரதான காரணமாகும்.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான இணைப்பு விகிதம் 1:10.11 இலிருந்து 1:1.88 வரை குறைவடைந்திருந்தது. உரிமை மூலதனத்துடன் ஒப்பிடுகையில் கடன் மூலதனம் 395 சதவீதத்தால் அதிகரித்திருந்தமையே இதற்குப் பிரதான காரணமாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை வாடிக்கையாளரின் கோரிக்கையின் அடிப்படையில் எவ்வித உடன்படிக் கையிலும் கைச்சாத்திடாது ரூபா 25,035,238 பெறுமதியான மீன்பிடி கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டி ருந்த போதிலும், அந்த வாடிக்கையாளர்கள் அவற்றை கொள்வனவு செய்வதற்கு மறுத்தி ருந்தமையால் இனங்காணப்பட்ட நட்டமொன்று ஏற்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதற்குப் பொறுப்பு டைய தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | நுட்டத்திற்கு பொறுப்பு டைய தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண டும். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மன்றத்தின் உள்ளபடி யான உற்பத்தியும் உள்ளபடியான வருமானமும் பாதிடப்பட்ட அளவைக் காட்டிலும் குறைவாகக் காணப்பட்டதுடன், உற்பத்திக் கிரயம் 107 சதவீதத்தினாலும் நிர்வாகச் செலவினம் 13.35 சதவீதத் தினாலும் ஏனைய செலவினம் 473 சதவீத த்தினாலும் அதிகரித்திருந்த போதிலும், செலவுகளைக் கட்டுப்படுத்தி வருமானத்தை அதிகரிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | செலவுகள் அதிகரிப்பை கட்டுப்படுத்தி வருமான த்தை அதிகரிப்பதற்கு முகாமைத்துவம் நடவடி க்கை எடுத்தல் வேண் டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2009 சனவரி 01 ஆந் திகதி ரூபா 940,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட கடைசல் பொறியை (டுயவாந ஆயஉாரைெ) உச்ச இயலளவில் பயன்படுத்துவதற்காக போதிய பதவி யணியினர் காணப்படாதிருக்கையில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,658,705 செலவில் மேலுமொரு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த துடன், அதனையும் பயன்படுத்தாது களஞ்சியத்தில் வைத்திருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 10 ஆண்டு காலமாக அதற்குப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்காண்ப தற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | அரசாங்க நிதி ஏற்பா ட்டை செலவிட்டு கொள் வனவு செய்து எவ்விதப் பயன்பாட்டிற்கும் எடுக்கா மைக்கு பொறுப்புடைய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்கள் தொடர்பில் உரிய நடவ டிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ரூபா 5,395,137 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஜெல்கோட் ஸ்பிரேகன் இயந்திரம் 07 ஆண்டுகளிற்கும் மேலாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | அரசாங்க நிதி ஏற்பா ட்டை செலவிட்டு கொள் வனவு செய்து எவ்விதப் பயன்பாட்டிற்கும் எடுக்கா மைக்கு பொறுப்புடைய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்கள் தொடர்பில் உரிய நடவ டிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2013 மார்ச் 05 ஆந் திகதி ரூபா 4,166,964 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த பிலாஸ்மா வெட்டும் இயந்திரம் (ீடயளஅய ஊரவவநச ஆயஉாமைநெ) 06 ஆண்டுகளிற்கும் மேலாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது விளைவற்று பாதுகாப்பற்றதாக வைக்கப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க நிதி ஏற்பாட்டை செலவிட்டு கொள்வனவு செய்து எவ்விதப் பயன்பாட்டிற்கும் எடுக்காமைக்கு பொறுப்புடைய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகள் தாமதமடைதல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த இரண்டு பல்நாள் படகுகளிற்குரிய ரூபா 30,321,342 தொகை நடைபெற்று வரும் வேலையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், இந்த இரண்டு படகுகளினதும் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு படகுகளை பயன்படுத்துவதற்காக உரிய தரப்புக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | உற்பத்தி நடவடிக்கைகளை உரிய திகதிக்குள் பூரணப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2017 ஆம் ஆண்டில் மொரிசியஸ் நாட்டிற்காக உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 34,225,000 பெறுமதியான படகின் உற்பத்தி வேலைகள் 2019 திசெம்பர் 31 வரை முடிவடையாதிருந்ததுடன் அத்தி கதியில் உள்ளவாறான கிரயம் ரூபா 9,096,352 ஆகும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | உற்பத்தி நடவடிக்கைகளை உரிய திகதிக்குள் பூரணப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 1.2.1(இ), 1.2.1(ஊ), 5.3.1(இ) மற்றும் 5.3.2 வழிகாட்டல்களின் பிரகாரம் மட்டக்குளி இல் உள்ள இயந்திர ஆலையின் உற்பத்தி நடவடிக்கைகளிற்காக ரூபா 47,543,238 பெறுமதியான மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறு விலைகளை சமர்ப்பிக்கையில் குறைந்தபட்சம் 21 நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக 14 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய கூறுவிலை ஆவணங்களை பயன்படுத்துகையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பெறுகைகள் குழுவால் அவை பரிசோதிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கூறுவிலைகளைக் கோருகையில் கேள்விதாரர்களிற்கு காணப்பட வேண்டிய தகைமைகள் மற்றும் கருது கோள்கள் கருத்திற்கொள்ளப்படாது கேள்விப் பத்திரங்கள் தயாரிக்கப் பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| (ஆ) 2012 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய 27 ஆம் இலக்க குறைநிரப்பால் திருத்தப்பட்ட கொள்வ னவு வழிகாட்ட ல்கள் கோவையின் 2.8.1(ஆ) பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் மன்றத்தின் மூன்று உத்தி யோகத்தர்கள் பங்குபற்றியிருந்ததுடன், விடயம் சார்ந்த நிபுனர் ஒருவரேனும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | கொள்வனவு வழிகாட்ட ல்கள் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் படி நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐஆருடு – யு – 0061 – முஆே ஆம் இலக்க படகுக்காக உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய பெறுமதியைக் காட்டிலும் மேலதிகமாக ரூபா 3,264,560 செலுத்தப்பட்டிருந்ததுடன், படகுக்கான மின்பிறப்பாக்கிக்காக ரூபா 630,632 செலுத் தப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 வரையிலும் குறித்த மின்பிறப்பாக்கி படகுக்கு பொருத்தப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் 2 ஆவது நிபந்தனையின் படி இந்தப் படகை 2016 திசெம்பர் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தி நலனாளிக்கு ஒப்படைக்க வேண்டிய போதிலும், ஏறத்தாழ 03 ஆண்டுகள் தாமதிக்கப்பட்ட பின்னரேனும் படகின் ஹல் (ர்ரடட) பகுதி மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அது படகின் ஒட்டுமொத்த பெறுமதியில் 18 சதவீதம் மாத்திரமேயாகும். மேலும், முறையாக ஒப்பந்த காலத்தை நீடித்துக் கொள்ளலும் இடம் பெற்றிருக்கவில.லை. | புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவ டிக்கை எடுப்பதாக அறிவிக் கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளிற்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.7 வாகனத் தொகுதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 செப்தெம்பர் 06 ஆந் திகதிய 19 ஆம் இலக்க குறைநிரப்பால் திருத்தப்பட்ட கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 9.3.1(ஆ) பந்தியின் பிரகாரம் ரூபா 200,000 இற்கு மேற்பட்ட வாகன திருத்தங்கள் தொடர்பில் அமைச்சு செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது டுமு-2629 ஆம் இலக்க வாகனம் ரூபா 502,373 செலவிடப்பட்டு திருத்தப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | வாகன திருத்தங்கள் தொடர் பில் அமைச்சு செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி∴12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1. ஆம் பிரிவின் படி வரைவு ஆண்டறிக்கையும் நிதிக்கூற்றுக்களும் நியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 11 மாதங்கள் தாமதிக்கப்பட்ட பின்னர் அதாவது 2021 மார்ச் 17 ஆந் திகதியன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | பொது முயற்சிகள் சுற்றறிக் கையின் படி வரைவு ஆண்டறிக்கையும் நிதிக் கூற்றுக்களும் நியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் கணக்காய் வாளர் தலைமை அதிபதி க்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி∴12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் படி மன்றத்தினால் 2019∴2023 ஆம் ஆண்டுகளிற்கான கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட் டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் படி கூட்டி ணைந்த திட்டம் சமர்ப்பிக்க ப்படுதல் வேண்டும். |

**4.3 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)2019 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 60 அடிகள் கொண்ட 4 பல்நாள் படகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், புதிதாக படகுகளை உற்பத்தி செய்வதற்கு கட்டளைகள் கிடைக்காதிருந்ததுடன் அது தொடர்பில் உயர்மட்ட முகாமை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | திட்டமிடப்பட்டிருந்த படகு களை நிர்மாணிப்பதற்காக கட்டளைகளை பெற்றுக் கொள்தல் தொடர்பில் உயர்மட்ட முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) 2019 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி மிதக்கும் படகு வீடு (குடழயவவைெ டீழயவ ர்ழரளந) மற்றும் மிதக்கும் சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றை நிர்மாணித்து வருமான த்தை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டி ருந்த போதிலும், அது தொடர்பில 2019 ஆம் ஆண்டின் போது கட்டளைகளை பெற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | திட்டமிடப்பட்டிருந்த படகு களை நிர்மாணிப்பதற்காக கட்டளைகளை பெற்றுக் கொள்தல் தொடர்பில் உயர்மட்ட முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |